**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.163/2018**

**Deposition of Witness for : P.W.11**

**Name :** திரு.விஜயமணி

**Father's Name :** வடிவேல்

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30-6-2023.**

முதல் விசாரணை -

நான் வயலாத்தூர் கிராமம் குடியிருக்கிறேன். உத்திரமேரூரில் ஓட்டல் வைத்துள்ளேன். சம்பவம் நடந்தபோது சென்னையில் ஓட்டலில் வேலை செய்தேன். இறந்த சுரேஷ் தெரியும். எனக்கு மாமா முறை. ஆஜர் எதிரிகளை தெரியும். சுரேஷ் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

21.01.2017 அன்று இரவு 7.30 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது சுரேஷ் வீட்டிற்கும் எதிரிகள் தரப்பினருக்கும் ஏதோ சண்டை என்று

கேள்விப்பட்டேன். பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு வந்தபிறகு சுரேசின் அம்மா சுசீலா கத்திக்கொண்டே 8.30, 9 மணிக்கு வந்தார். அப்போது என்னுடன் என் அப்பா வடிவேல் வந்தார்.

சுசீலா அப்போது சுரேஷ் பிரச்சனை சம்பந்தமாக தூசி காவல்நிலையம் செல்வதாகவும், அவருக்கு பின்னால் ஞானவேல், நாகப்பன், தனசேகரன், குமரவேல், இளையவேல், சேகர் ஆகிய ஆறு பேரும் வண்டி எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்னவென்று போய் பாருங்கள் என்று சொன்னார். அதனால் பதறி பின்னாலே நானும் என் அப்பாவும் இருசக்கர வாகனத்தில் சென்றோம்.

ஞானவேல் மற்றும் நாகப்பனும் சுரேசை பிடித்துக்கொள்ள குமரவேல், இளையவேல், தனசேகரன், சேகர் ஆகியோர் கையில் கத்தி மற்றும் தடியால் அடித்துக்கொண்டு இருந்தார்கள். எங்களை பார்த்தவுடன் அப்படியே சிதறி ஓடிவிட்டார்கள். ஜெயபாலன், சிவா, உமேஷ் அவர்களும் பின்னாலேயே வந்தார்கள். உமேசிடம் ஆம்புலன்சிற்கு போன் செய்யசொல்லி நான் சொன்னேன். அடுத்த 10,15 நிமிடத்திற்கெல்லாம் ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. ஆம்புலன்ஸ் வந்து ஒரு அரை மணி நேரத்திற்கு கீழே விழுந்து இருந்த சுரேசை எடுத்து முதலுதவி கொடுத்து என்னையும் என் அப்பாவையும் ஆம்புலன்சில் கொண்டு சென்றோம்.

ஆம்புலன்சில் சிகிச்சை கொடுக்கும்போது சுரேஷ் என் அப்பாவை பார்த்து மாமா என்று கையை தூக்கி அழைத்தார். பிறகு காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்துச் செல்லப்பட்டார். மருத்துவமனையில் பரிசோதனை செய்து முன்பே உயிர் போய்விட்டது என்று

சொன்னார்கள். அன்று இரவு முழுவதும் மருத்துவமனையில் இருந்தோம். நான் ஆம்புலன்சில் செல்லும்போது சுரேஷிற்கு முதலுதவி கொடுத்தபோதும் சுரேஷ் இறக்கும் நிலையில் அமைதியாக இருக்கும்போதும் அவர் உடல் முழுவதும் என்னுடைய கைபேசி எண்ணான 9176451767-ல் வீடியோ எடுத்தேன்.

நான் என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தபோது நான் வீடியோ எடுத்ததை சொன்னேனா என்றால் அப்போதுள்ள பதட்டத்தில் நான் சொல்லவில்லை. தற்போதும் என்னிடம் அந்த வீடியோ உள்ளது. நான் பார்த்தபோது சுரேசின் வலது தலையின் காதுக்கு மேல் இரண்டு இன்ச் ஆழத்திற்கு கத்தியால் பிளக்கப்பட்டிருந்தது. வலது கன்னம் வீங்கியிருந்தது. உதட்டில் அங்கங்கு கீரல் இருந்தது. நகம் பட்டால் எப்படி இருக்குமோ அப்படி கீரல் இருந்தது. நடுதொண்டை ரத்தம் கட்டியது போல் வீங்கியிருந்தது.

அதன்பிறகு போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. அதன்பிறகு அரசாணிப்பாளையத்தில் சம்பவத்திற்கு இரண்டு நாட்களுக்கு பிறகு மதியம் நான் வேலையாக சென்றபோது என்னுடன் தற்போது பெயர் ஞாபகம் இல்லை இருந்தார். நாகப்பனை அரஸ்ட் செய்து அழைத்துச் சென்றார்கள். அது சம்பந்தமாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டேன்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது கையொப்பம் என்னுடன் வந்தவர். பெயர் ஞாபகம் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.5. மேற்கண்ட கையொப்பம் எதற்காக போட்டேன் என்றால் அரஸ்ட் செய்ததற்காக

போட்டேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அதை எதற்காக போட்டேன் என்று தற்போது ஞாபகம் இல்லை. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.6.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு பகுதிக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பு பகுதி குறுக்கு விசாரணை

22.1.2017 அன்று காலை 11.00 மணிக்கு, நாகப்பன், தீபா, நீலா ஆகியோரை ஆக்கூர் கூட்ரோடு பஸ் ஸ்டாப்பில் காவல் ஆய்வாளர் கைது செய்தபோது எதிரி நாகப்பன் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என்னுடன் வந்த தமிழரசன் முன்னிலையில் காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றால் சரி தான். அதில் தான் நானும் தமிழரசனும் கையொப்பம் போட்டோம்.

அதே தினம் பகல் 1 மணிக்கு எதிரி நாகப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அரசாணிப்பாளையம் கால்வாயில் இருந்து கத்தி ஒன்று, தடிக்கொம்பு இரண்டு, உறீரோஉேறாண்டா ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றால் சரி தான். மேற்கண்ட பொருட்களை நாகப்பன் எடுத்துக்கொடுத்தார் என்றால் சரி தான். அதற்காக பதிவு செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் நானும் என்னுடன் வந்த தமிழரசனும் கையொப்பம் போட்டோம் என்றால் சரி தான்.

ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8. மேற்கண்ட பொருட்களை பார்த்தால்

என்னால் அடையாளம் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். நீதிமன்றத்தில் உள்ள கத்தி சான்று பொருள் 1. கட்டை சான்று பொருள் 2.

இருசக்கர வாகனத்தை பார்த்தால் அடையாளம் தெரியும். (இருசக்கர வாகனமான பதிவு எண்.டிஎன் 25-எஸ்-2693 ஹீரோஹோண்டா பேஷன் பிளஸ்-வாகனத்தை 1ம் எதிரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்று சென்று மீண்டும் நீதிமன்றம் கேட்கும்போது ஆஜர் செய்யாததால் வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு வாகனத்தை பொறுத்து குறியீடு செய்வதில் ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மனு குற்றவியல் பல்வகை மனு எண்.120/2023, 3.3.2023 அன்று அனுமதிக்கப்பட்டு, செய்யாறு நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வண்டியின் பிணையதாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி உத்தரவிடப்பட்டு 17.3.2023 அன்று மனுவிற்கு வாய்தா போடப்பட்டது. 13.3.2023 அன்று நீதித்துறை நடுவர் செய்யார் அவர்களுக்கு கடிதமும் அனுப்பப்பட்டது.)

டிஎன்.25எஸ்-2693வண்டி உள்ள புகைப்படம் என்னிடம் காட்டப்படுவது தான். புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் அது. புகைப்படம் சான்று பொருள் 3.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இறந்துபோன சுரேஷ் என் அம்மாவின் சகோதரரின் மகன் என்றால் சரி தான். நானும் என் அப்பா வடிவேலும் அடிப்பட்ட இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே எங்கள் ஊரை சேர்ந்த நபர்கள் அங்கு இருந்தார்கள் என்றால்

இல்லை. அனைவரும் ஒன்றாக சென்றோம் என்றால் ஒன்றன்பின் ஒன்றாக சென்றோம். நானும் எங்கள் ஊரை சேர்ந்தவர்களும் சென்று இருக்கும்போதே அடிப்பட்ட இடத்தில் 108 ஆம்புலன்ஸ் வந்து நின்று கொண்டு இருந்தது என்றால் நான் போய் பார்த்து உமேஷிடம் சொன்ன பிறகு தான் ஆம்புலன்ஸ் வந்தது.

உமேஷ் என்பவர் போன் செய்து தான் ஆம்புலன்ஸ் வந்தது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும் எங்கள் ஊரை சேர்ந்தவர்களும் அடிப்பட்ட இடத்திற்கு செல்வதற்கு முன்பே 108 ஆம்புலன்சில் அடிப்பட்ட சுரேசிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டுக் கொண்டு இருந்தது என்றால் சரியல்ல.நான் போனபிறகு தான் மாமாவிடம் சொல்லி ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அதன்பிறகு தான் முதலுதவி அளிக்கப்பட்டது. நான் ஊரில் இருக்கும்போது எத்தனை மணிக்கு சுசீலா கத்திக்கொண்டு வந்தார் என்றால் ஒரு 8, 8.30 இருக்கும், இருந்தாலும் இது தான் நேரம் என்று குறிப்பிட்டு சொல்ல தெரியாது.

சுசீலா கத்திக்கொண்டு வந்தபிறகு நான் அடிப்பட்ட இடத்திற்கு நான் எவ்வளவு நேரத்திற்கு சென்றேன் என்றால் எனக்கு நேரம் எல்லாம் சரியாக குறிப்பிட்டு சொல்ல தெரியவில்லை. நான் வேகமாக சென்றுவிட்டேன். (மீண்டும் மீண்டும் சாட்சியை எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எவ்வளவு நேரத்திற்கு செல்லப்பட்டது என்பது சம்பந்தமாக பல கோணங்களில் கேள்வி கேட்டுக்கொண்டே இருந்ததால் கேள்வியை பதிவு செய்ய நீதிமன்றம் மறுத்துவிட்டது).

அடிப்பட்ட இடத்தில் இருந்து காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு எவ்வளவு

நேரத்தில் சென்றோம் என்றால் 1ல் இருந்து 1.30 மணி நேரம் இருக்கும். அடிப்பட்ட இடத்தில் இருந்து காஞ்சிபுரம் எவ்வளவு தூரம் என்றால் சரியாக தெரியாது. ஆம்புலன்சில் ஏற்றியதில் இருந்து மருத்துவமனை செல்லும் வரை சுரேஷ் பேசவில்லை என்றால் ஆம்புலன்சில் ஏற்றும்போது மாமா என்று கையை தூக்கினார்.

நான் பார்க்கும்போது சுரேஷ் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் எங்கிருந்தது என்றால் ரோட்டிலேயே விழுந்து கிடந்தது. ரோடு என்பது இரண்டு பக்கமும் புதர் நிறைந்த பகுதி என்றால் சரி தான். இருசக்கர வாகனம் எங்கிருந்தது என்றால் நடுரோட்டில் இல்லை. ரோட்டின் ஓரத்தில் இருந்தது. சுரேஷ் அணிந்திருந்த சட்டை எல்லாம் கிழிந்ததா என்றால் கிழிந்து இருந்ததா என்று ஞாபகம் இல்லை. ரத்த கறை இருந்தது. ஜெர்கின் ஒன்று போட்டு இருந்தார். சீருடையில் இருந்தார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்துவிட்டார் என்று அறிவித்த பிறகு எவ்வளவு மணி நேரம் நான் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் இரவு முழுவதும் இருந்தேன். மறுநாள் எத்தனை மணி வரை இருந்தேன் என்று ஞாபகம் இல்லை. இரவு முழுவதும் மருத்துவமனையில் இருக்கும்போதே தூசி காவல்நிலையத்திற்கு மருத்துவமனையில் இருந்து தகவல் தெரிவிக்கப்பட்டு, போலிசாரும் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள் என்றால் அந்த நேரத்தில் போலிசாரை பார்க்கவில்லை.

சுரேஷ் எந்த கட்சியை சேர்ந்தவர் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சுரேசின் இருசக்கர வாகனத்தில் கேப்டன் என்று எழுதப்பட்டு

இருந்ததா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து காவல்நிலையத்திற்கு எப்போது சென்றேன் என்றால் நான் காவல்நிலையம் செல்லவில்லை. பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை கொண்டு செல்லும் வரை காவல்நிலையம் நான் செல்லவில்லை என்றால் போகவில்லை.

சுசீலா அம்மாள் இரவு மருத்துவமனைக்கு வந்தாரா என்றால் நான் கவனிக்கவில்லை. அதற்கு பின்னிட்டு சுசீலா அம்மாள் மருத்துவமனையில் இருந்தாரா என்றால் அதையும் நான் கவனிக்கவில்லை. மோகனவேல் மனைவி பெயர் தமிழிசைவாணி என்றால் சரி தான். மோகனவேல் மருத்துவமனைக்கு வந்தாரா என்றால் நான் கவனிக்கவில்லை. என் தாயார் பெயர் ஜெயலட்சுமி. என் அம்மா ஜெயலட்சுமி இந்த வழக்கில் சாட்சி என்றால் சரி தான்.

சுரேஷ் திருவள்ளூர் பூந்தமல்லி அரசு பேருந்து பணி மனையில் நடத்துனராக பணியில் இருந்தார் என்றால் சரி தான். அவருக்கு ஊரில் பலவிதமான எதிரிகள் இருந்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. காரணம் நான் வெளியில் இருந்தேன். ஆனால் ஆஜர் எதிரிகள் மட்டும் அடிக்கடி சண்டை போடுவதாக என் அம்மா எனக்கு தகவல் சொல்வார்.

எங்கள் ஊரை ஒட்டியவாறு தான் செய்யாறு ஆறு போகும் என்றால் சரி தான். அடர்த்தியான புதர்கள் கொண்ட காடு போல் தோற்றம் அளிக்கும் பகுதி என்றால் சரி தான். அந்த பகுதியில் இரவு நேரங்களில் காட்டு பன்றிகள், நரிகள் மற்ற மிருகங்கள் மற்றும் மான் இரவு நேரத்தில் வரும் என்றால் அவ்வாறு எல்லாம் நான் பார்க்கவில்லை. வெளியூர் என்று நான்

எங்கெங்கு இருந்தேன் என்றால், சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இருந்தேன். இவ்வழக்கின் சாட்சியான வஜ்ஜிரவேல் என்பவரின் மகன் சசிக்குமாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி சம்பவ தினம் அன்று நடந்ததா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

இறந்த சுரேஷ் ஆற்றில் திருட்டுத்தனமான மணல் எடுப்பவர்களையும், காட்டு விலங்குகளை வேட்டையாடுபவர்களையும் மிரட்டி பணம் பறிப்பது தான் இறந்த சுரேஷின் வேலை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுரேஷின் இறப்பிற்கு பின்னர் நான் காவல் நிலையம் எதற்கும் செல்லவில்லை என்றால் சரிதான். சுரேஷின் இறப்பிற்கு பின்னர் புகார் கொடுப்பதற்காக காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் புகார் கொடுக்க என்று ஞாபகமில்லை, ஒரே முறை காவல் நிலையம் சென்றேன், நேரம் எனக்கு ஞாபகமில்லை. காவல் நிலையம் செல்லும் போது அங்கு நாகப்பன் இருந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

சம்பவம் நடந்த அன்று நான் சுரேஷை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பிரேத அடக்கம் செய்த பிறகு வேலைக்குச் சென்றுவிட்டேனா என்றால் 2 நாட்கள் ஊரில் இருந்தேன், பிறகு இறப்பு காரிய சடங்கிற்கு வந்தேன். 2 நாட்கள் ஊரில் இருந்த போது காவல் நிலையத்திற்கு சென்றோ, காவலர்களையோ சந்திக்கவில்லை என்றால் எனக்கு சரியாக ஞாபகம் வரவில்லை.

அரசாணைபாளையம் எங்கள் ஊரிலிருந்து எவ்வளவு தூரம் என்றால் ரோடு வழியாக சுமார் 4 கி.மீ., கழனி வழியாக சுமார் 1 கி.மீ. ஆக்கூர் எங்கள் ஊரிலிருந்து எவ்வளவு தூரம் என்றால் எனக்கு தெரியவில்லை. போலீசார்

நான் ஊரிலிருக்கும் போது நாகப்பனை கைது செய்துவிட்டோம் என்று என்னிடம் சொன்னார்களா என்றால் என்னிடம் அவ்வாறு சொல்லவில்லை. என்னுடன் கையொப்பம் போட்ட நபர் யார், எங்கு வேலை செய்கிறார், என்ன என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

ஆக்கூர் பேருந்து நிறுத்தம் என்பது 50, 60 கடைகள் நிறைந்த இடம் என்றால் அது குறித்து என்னால் சொல்ல முடியாது. இறந்த சுரேஷிற்கு பணி விடுப்பு உண்டு என்றால் சரிதான். அந்த விடுப்பு நாட்களில் சுரேஷ் மது குடித்துவிட்டு தான் இருப்பார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எங்கள் வீட்டிலிருந்து சுசீலா வீடு எவ்வளவு தூரம் என்றால் 40, 50 அடி தான் இருக்கும், 3, 4 வீடுகள் தள்ளி இருக்கும்.

எங்கள் வீட்டிலிருந்து சுரேஷ் அடிப்பட்ட இடத்திற்கு பதட்டம் இல்லாத தற்போதைய நிலையில் செல்ல வேண்டும் என்றால் 10 நிமிட நேரம் ஆகும் என்றால் தெரியவில்லை. நான் சென்று பார்க்கும் போது ஆற்றங்கரை வளைவில் தான் சுரேஷும் இரு சக்கர வாகனமும் இருந்தது என்றால் நான் பார்க்கும் போது சுரேஷை விட்டு விட்டு எதிரிகள் ஓடினார்கள், அந்த இடம் வளைவு தான்.

சுரேஷ் என்பவர் அந்த வளைவான இடத்தில் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது காட்டு விலங்குகள் தடுத்தோ, கரடு முரடான பாதையில் இரு சக்கர வாகன்தை குடி போதையில் ஆஜாக்கிரதையா ஓட்டியோ எதிரே வந்த வாகனத்தினால் விபத்தோ ஏற்பட்டது தான் இறந்துவிட்டார் என்றால் நான் பார்க்கும் போது ஞானவேல், நாகப்பனும் பிடித்துக் கொள்ள மற்ற எதிரிகள் ஞானசேகரன், குமரவேல், தனசேகர் ஆகியோர் கத்தியாலும்

கட்டையாலும் அடித்துக் கொண்டிருந்தார்கள், என்னை பார்த்ததும் ஓடிவிட்டார்கள். வழக்கறிஞர் சொல்வது போல் விலங்கு மற்றும் விபத்து நடக்கவில்லை.

சுரேஷ் இறப்பை பயன்படுத்தி முன்விரோதம் காரணமாக கொடுக்கப்பட்ட ஒரு புகாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுரேஷ் இறப்பிற்கும் இந்த எதிரிகளுக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் கதை தான் கட்டுக் கதையாக உள்ளது.

<u>7 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

சுசீலா இரவு சுரேஷ் காவல் நிலையம் செல்வது குறித்து கத்திக் கொண்டு வரும் போது முதலில் எங்களிடம் தான் சொன்னார் என்றால் நாங்கள் அங்கு இருந்தோம். அந்த சமயத்தில் ஊர்த்தலைவர் நாகப்பன் தான் என்றால் சரிதான். ஊர் தலைவர் நாகப்பனிடம் சுசீலா போய் சொன்னாரா என்றால் கொலை செய்வதற்கே நாகப்பன் தான் சென்றார்.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஹோட்டல் மேனேஜ்மண்ட் என்றால் கேட்டரிங் டெக்னாலஜி, சமையல் கலை. நாகப்பன் கொலை செய்வதற்காக சென்றார் என்ற விவரத்தை போலீசார் விசாரணியில் சொல்லியுள்ளனே என்றால் நாகப்பன் மட்டும் மல்ல, அவருடன் சேர்ந்த மற்றவர்களும் தான் என்று சொல்லியுள்ளேன். ஞானவேல் மற்றும் நாகப்பன் ஆகிய இருவரும் சுரேஷை பிடித்துக் கொண்டார்கள் என்பதை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சாட்சி முதலில் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டு, பிறகு 6

வருடங்கள் ஆனதால் என்ன சென்னேன் என்று ஞாபகமில்லை என்று சாட்சி அளிக்கிறார்.

குமரவேல், இளையவேல், தனசேகர் மற்றும் சேகர் ஆகியோர் கத்தி மற்றும் தடியால் அடித்துக் கொண்டிருந்தார்கள் என்ற விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். என்ன பார்த்தவுடன் எதிரிகள் சிதறி ஓடிவிட்டார்கள் என்பதை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் எத்தனை முறை, எந்த இடங்களில் விசாரித்தார்கள் என்றால் சரியாக ஞாபகமில்லை. செய்யாறு நீதிமன்றத்தில் விசாரித்தார்களா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை.

எங்கள் ஊரிலிருந்து கிளம்பி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் சென்று, மருத்துவமனை செல்லும் வரை நானும் என் அப்பாவும் ஒன்றாக தான் இருந்தோமா என்றால் ஒன்றாக தான் இருந்தோம். நான் பார்த்த போது சுரேஷிற்கு வலது காதிற்கு மேல் 2 இன்ச் அளவிற்கு பிளந்திருந்ததும், வலது கன்னம் வீங்கியிருந்தது, உதட்டில் கீறிய காயங்கள் இருந்தது, நடுதொண்டை ரத்தம் கட்டியது போல் இருந்தது சம்மந்தமாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

வலது கன்னத்தில் அடி இல்லை என்றால் சாட்சி இடது கன்னத்தில் வீக்கம் இருந்தது என்று கூறுகிறார். நான் வேலை செய்யும் இடம் சென்னை சோழிங்கநல்லூர் என்றால் அப்போது அங்க தான் வேலை பார்த்தேன். வேலைக்கு பேருந்தில் செல்வேனா என்றால் பேருந்தில் செல்வேன். கையொப்பம் போட்டதாக சொல்வது எல்லாம் ஊரில் வைத்து போட்டேனா

**என்றால் ஞாபகமில்லை, காவல் நிலையத்தில் வைத்து போட்டேனா என்றால் ஞாபகமில்லை.**

**இதே நீதிமன்றத்திற்கு இவ்வழக்கிற்கு சாட்சி சொல்வதற்காக 2வது நாளாக வந்துள்ளேன் என்றால் 2வது நாளாக வந்துள்ளேன். போலீசார் என்னிடம் ஏதாவது வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சாட்சிகளோ எதிரிகளோ போலீசாரிடம் ஏதாவது வாக்குமூலம் கொடுத்தார்களா என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் உள்ள ஆயுதங்களை போலீசார் என்னிடம் காட்டினார்களா என்றால் சாட்சி கைப்பற்றிய இடத்தில் எடுத்துக் கொடுத்தது தான் தெரியும் என்று சாட்சியம் அளித்துவிட்டு தற்போது ஞாபகமில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.**

**நான் ஊரில் இருக்கும் போது சுசீலா அம்மாள் கத்திக் கொண்டு வந்ததாகவும், நானும் என் அப்பாவும் இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், சம்பவம் நடந்த இடத்தில் சுரேஷை இரு எதிரிகள் பிடித்துக் கொள்ள மற்ற எதிரிகள் வெட்டியதாக சொல்வதும், என்னை பார்த்தவுடன் எதிரிகள் ஓடியது என்பதும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 நாட்களாக போலீசார் எனக்கு சொல்லிக் கொடுத்து இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**நாகப்பன், தீபா, நீலா ஆகியோர்களை கைது செய்யும் போது உடனிருந்ததாக சொல்வதும், நாகப்பன் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததும் பொய்யாக இந்த வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எல்லாம் உண்மை. எந்த வாக்குமூலத்தின் அடிப்படையிலும் நீதிமன்றத்தில் உள்ள பொருட்களையோ அல்லது எந்த பொருட்களையோ கைப்பற்றவில்லை**

என்றாலும் போலீசார் சொல்லிக் கொடுத்ததின் பேரில் அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்த போது சரி என்று சொல்ல சொன்னதால் நான் சரி என்று சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. போலீசார் யாரும் எனக்கு சொல்லிக் கொடுக்கவில்லை. நானாகவே தான் சாட்சியம் அளிக்கிறேன்.

கைது செய்து பொருட்களை கைப்பற்றியது வரை சுமார் முக்கால் மணி நேரம் ஆகியிருக்குமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. கைப்பற்றி நேரம் காலையா மாலையா என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது. எழுதினார்களா என்றால் எழுதினார்கள், எத்தனை பக்கங்கள் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அதை எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் நான் பார்க்கவில்லை.

நான் தெரியாது, ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளிப்பது பொய் சாட்சியம் அளிப்பதால் தான் என்றால் நான் பொய் சாட்சியம் அளிக்கவேண்டிய அவசியம் இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.